## ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தமிழ்நாடு பெரும் வளர்ச்சி அடைந்துள்ளது!

# மாமன்னன் பூலித்தேவர் மணிமண்டபத்தை அரசு சார்பில் பராமரிக்கவேண்டும்!

## சட்டப் பேரவையில் - வாசுதேவநல்லூர் ஈ.ராஜா கோரிக்கை!

சென்னை, செப்.11 -

**சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தில் வாசுதேவ நல்லூர் ஈ.இராஜா பேசுகையில், மாமன்னன் பூலித்தேவன் மணிமண்டபத்தை அரசு சார்பில் பராமரிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கை விவாதத்தில் வாசுதேவநல்லூர் ஈ.ராஜா பேசியதாவது:-

அடிப்படைக் கல்வியே மறுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகத்தில், அதே கல்வியை ஆயுதமாகக் கொண்டு, உலகமே போற்றும் உயரத்தினை அடைந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களை வணங்குகிறேன். தமிழகம் முழுவதும் சாதிய வேற்றுமைகளைக் களைந்து, சமூக நீதியையும், சுயமரியாதையையும் நிலைநாட்ட தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த தந்தை பெரியார் அவர்களை வணங்கி, தந்தை பெரியாரின் சிந்தனைகளையும், கொள்கைகளையும் ஆட்சியின் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் வடிவமைத்து, தமிழ்நாட்டின் சமூக நீதிக்கான அரசியல் பாதையை உருவாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களையும் வணங்குகிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட சமத்துவத் தமிழ்நாட்டை உருவாக்கிட தன் வாழ்நாள் முழுவதும் உழைத்த, நீ, நான் என்றால் உதடுகள் ஒட்டாது, நாம் என்றால்தான் உதடுகள் கூட ஒட்டும் என்ற எளிமையான வரிகளில்கூட சமூக ஒற்றுமையின் ஆழமான தத்துவத்தைச் சொன்ன வரலாற்றுச் சிறப்புமிக்க தலைவர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் நான் போட்டியிட வாய்ப்பளித்த சமூக நீதி, சமத்துவம், பொரு ளாதார முன்னேற்றம் மற்றும் கல்வி வளர்ச்சிக்காக எண்ணற்ற திட்டங்களைத் தீட்டி, செயல்படுத்திய திராவிட இயக்கத்தின் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான தளபதியார் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வரலாற்று சிறப்புமிக்க இந்த சட்டமன்ற கூட்டத் தொடரில் எங்களையெல்லாம் வழிநடத்தும் எதிர்க் கட்சித் தலைவர், அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது வெற்றிக்காக, பிரச்சாரம் மட்டும் மேற்கொள்ளாமல், வியூகங்கள் வகுத்துத் தந்த, கழக துணைப் பொதுச் செயலாளர், பாராளுமன்ற உறுப்பினர் பாசமிகு அக்கா, திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களையும் வணங்குகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன், கே.என். நேரு அவர்களுக்கும், எதிர்க்கட்சிக் கொறடா அண்ணன் எ.வ. வேலு அவர்களுக்கும், துணைக் கொறடா மற்றும் பொருளாளர் உள்ளிட்ட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தய சுதந்திரப் போராட்டத்தின் அன்னிய ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலைக் குரலைக் கர்ஜித்த மாமன்னன், பூலித்தேவன் பிறந்த மண், வெள்ளேய பரங்கியர் படையின் கொலைவெறித் தாக்குதலை எதிர்த்து இந்த மண்ணின் மானம் காக்க சமர்களத்தில் உயிர்நீத்த தளபதி மாவீரன் வெள்ளிக் காலடி மாவீரன் ஒண்டிவீரன் பிறந்த மண், எங்கள் மண். தமிழரின் தொன்மைகளையும், தனித் தன்மையையும் உலகறியச் செய்த மொழி ஞாயிறு, தேவநேய பாவாணர் பிறந்த மண்; தமிழ் இசைக்கும் தமிழ் இசைப் பாடல் மரபுக்கும் தனிச் சிறப்பைச் சேர்த்த காவடி சிந்தின் புகழை உலகறியச் செய்த சென்னிகுளம் அண்ணாமலை ரெட்டியார் பிறந்த மண்; வடக்கே உள்ள காசிக்கு நிகராகப் போற்றப்படும் தென்காசியின் கரிவளம் நிட்சேப நிதி என காந்தியடிகள் அஸ்தி கரைக்கப்பட்ட மண்; என்று பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க தடங்களைத் தன்னகத்தே கொண்ட வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதியில் எனக்கு வெற்றி வாய்ப்பை வழங்கிய வாக்காளப் பெருமக்களுக்கும்,

இந்த வெற்றிக்காக அயராது உழைத்த கழக நிர்வாகிகளுக்கும், தோழமைக் கட்சி நிர்வாகிகளுக்கும், தொண்டர்களுக்கும், நண்பர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், என்னுடைய குடும்பத்தினர் என அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரண்டாவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த மாமன்றத்தில் எனது முதல் உரையைத் தொடங்குகிறேன்.

சில தினங்களுக்கு முன்பு சமூக நீதித் துறை அமைச்சர் அவர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு திராவிடர் முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது என்ற ஒரு கேள்வியை எழுப்பியிருந்தார்கள். அமைச்சர் அவர்களுக்கு வரலாற்று உண்மைகளை இந்த அவையின் வாயிலாக நினைவுப் படுத்த விரும்புகிறேன்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூக முன்னேற்றம், கல்வி முன்னேற்றம், பொருளாதார முன்னேற்றம், அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியவற்றை வெறும் தேர்தல் வாக்குறுதியாகப் பார்க்காமல், அரசின் கொள்கைகளாக மாற்றி செயல்படுத்திய இயக்கம் திராவிடர் முன்னேற்றக் கழகம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த கல்வி உதவிகளை விரிவுப்படுத்தி, கல்வி என்பது பணம் இருப்பவர்களுக்கு மட்டுமல்ல. சமூகத்தில் விளிம்பு நிலையில் இருக்கும் குழந்தைகளுக்கும் உரிமை என்ற நிலையை உருவாக்கியது தி.மு.க. அரசு. வாடகை கட்டடங்களில் இயங்கி வந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கு விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் அமைக்க வேண்டும் என்று முடிவெடுத்து, 493 விடுதிகளுக்கு சொந்தக் கட்டடங்கள் அமைத்தது கலைஞர் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசு.

### இலவச கல்வியை வழங்கியது கலைஞர் அரசு!

இன்று விடுதிகளில் படித்து உயர் கல்வி பெற்ற ஆயிரக்கணக்கான மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பின்னால், அந்தத் திட்டத்தின் பங்கு இருக்கிறது. 2001 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவிகளுக்கு அரசுக் கல்லூரிகளில் முதுநிலைப் படிப்பு வரை இலவச கல்வி வழங்கும் திட்டத்தை அறிவித்தது கலைஞர் தலைமையிலான தி.மு.க. அரசு.

தமிழ்நாட்டின் 69 சதவிகித இடஒதுக்கீடு என்பது வெறும் எண்ணிக்கை அல்ல. அது பல தலைமுறைகளாக ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கிடைத்த சமூக நீதிப் பாதுகாப்பு கவசம். (மேசையைத் தட்டும் ஒலி) அதில், ஆதி திராவிடர் மக்களுக்கு வழங்கப்படும் 18 சதவிகித இடஒதுக்கீட்டிற்குள் சமூகத்தில் மிகவும் பின்தங்கிய அருந்ததியர் மக்களுக்கு 3 சதவிகித உள்ஒதுக்கீட்டினை வழங்குவதற்கான சட்டத்தினைக் கொண்டு வந்தது தி.மு.க. அரசு. இது ஒரு சாதாரண அரசாணை அல்ல. ஒரு சமூகத்தின் வலியைப் புரிந்து கொண்டு, அந்தச் சமூகத்திற்கு உரியப் பங்கினை உறுதிசெய்த சமூக நீதிப் போராட்டத்தின் வெற்றி.

### ஆதிதிராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப்பட்டா!

சாதியின் பெயரால் மக்கள் பிரிந்து வாழாமல் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்த மக்கள் ஒன்றாக வாழ வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் பெரியார் நினைவு சமத்துவபுரம் திட்டத்தை கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். இதுவரை சுமார் 247 சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டன. இதுவும் தி.மு.க. ஆட்சியில்தான். தாட்கோமூலம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தொழில் தொடங்குவதற்கான கடன், மானியம், சுயதொழில் வாய்ப்பு, திறன்பயிற்சி உள்ளிட்ட பல்வேறு பொருளாதார உதவிகளை விரிவுப்படுத்தியது தி.மு.க. அரசுதான். வீடற்ற, நிலமற்ற, ஏழை ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா. குறிப்பாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பெண்களுக்கு சொத்துரிமை மற்றும் பொருளாதார வலிமையை உருவாக்கும் வகையில் நிலம் வாங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது தி.மு.க ஆட்சிக்காலத்தில்தான்.

மனித மாண்பைக் காக்கும்விதமாக மனிதக் கழிவுகளை மனிதர்களே அள்ளும் அவலத்தை ஒழிப்பது என்பது ஒரு நிர்வாகப் பிரச்சினை மட்டுமல்ல. அது மனித மாண்பின் பிரச்சினை. அந்தத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மாற்றுத் தொழில், திறன் மேம்பாடு, பொருளாதார உதவி மற்றும் மறுவாழ்வு வழங்கும் நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தது தி.மு.க. அரசுதான்.

அண்ணல் அம்பேத்கருக்கு அளித்த மரியாதை என்னவென்றால், அண்ணல் அம்பேத்கர் பெயரை வெறும் சிலையாக கட்சி அலுவலகத்தில் மட்டும் வைக்காமல், சட்டக் கல்வியின் அடையாளமாக நிலைநிறுத்தும் வகையில், தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் சட்டத்தின்மூலம் உருவாக்கிய தன் பெரும்பங்கு கலைஞர் அவர்களையேச் சாரும். அண்ணல் அம்பேத்கர் பெயரில் மேலைநாடு ஆராய்ச்சி கல்வி மேற்கொள்ள அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டத்தைத் தந்தது தி.மு.க. அரசுதான். இதுதான் அண்ணல் அம்பேத்கருக்கு தி.மு.க. அரசு கொடுத்த மரியாதை.

ஆதி திராவிடர் திருக்கோயில் பராமரிப்புக்காக இரண்டரை இலட்சம் ரூபாய் மானியமாக உயர்த்தி வழங்கியது தி.மு.க.தான். ஆலய வழிபாட்டிலும் சாதி அடிப்படையிலான தடைகள் இருக்கக்கூடாது. தகுதி பெற்ற அனைவரும் அர்ச்சகராகும் வாய்ப்பு இருக்க வேண்டும் என்று சமூக நீதிக் கொள்கையை சட்ட வடிவமாக்கிய வரலாற்று சாதனையைப் புரிந்தவர் எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) காலனி என்றும், பச்சேரி என்றும் இருந்த பெயர்களை நீக்கிட ஆணைப் பிறப்பித்ததும் தி.மு.க.தான். முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த ஆட்சி அமைந்த 100 நாட்களுக்குள் பட்டியலின் மக்களின் பிரதிநிதிகளை அழைத்து நலக் குழுக் கூட்டம் மற்றும் கண்காணிப்புக் குழுக் கூட்டம் நடத்தியது தி.மு.க. அரசுதான்.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு தி.மு.க. அரசு என்ன செய்தது என்று கேட்பதும் மிகவும் நல்லக் கேள்விதான். ஆனால், அதற்கான பதில் ஒரே வரியில் சொல்லக்கூடியது அல்ல. கல்வியை வழங்கினோம், விடுதிகளைக் கட்டினோம். உதவி;j தொகைகளை விரிவுப்படுத்தினோம். பெண்களுக்கு இலவச கல்வி வழங்கினோம். தொழில்தொடங்க பொருளாதார உதவி வழங்கினோம். நில உரிமையை உருவாக்கினோம். சமத்துவபுரங்களை உருவாக்கி னோம். அருந்ததியர் மக்களுக்கு 3 சதவிகித உள்ஒதுக்கீடு வழங்கினோம். அண்ணல் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக்கழகத்தை உருவாக்கி னோம். மனித மாண்பைக் காக்கும் நடவடிக்கையை மேற்கொண்டோம். தூய்மைப் பணியாளர்களுக்கு நல வாரியம்.

நரிக்குறவர் சமுதாயத்திற்கு நலவாரியம்; புதிரை வண்ணார் சமுதாயத்திற்கு வாரியம் அமைத்ததும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போதுதான். இவையெல்லாம் வெறும் தேர்தல் வாக்குறுதிகள் அல்ல; பல தலைமுறைகளாக ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய கொள்கைகள்; ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சமூகக் கல்வி, பொருளாதார முன்னேற்றத்திற்காகத் தொடர்ந்து குரல் கொடுத்ததும், ஆட்சியில் அதை கொள்கைகளாக மாற்றி செயல்படுத்தியதும் திராவிட முன்னேற்றக் கழகம்தான். அதனால்தான் சமூக நீதி இருக்கும் வரை திராவிட இயக்கத்தின் பணி தொடரும்; சமத்துவம் நிலைக்கும் வரை தலைவர் கலைஞர் அவர்களின் கொள்கை தொடரும்; (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் முன்னேற்றம் தொடரும் வரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் பயணமும் தொடரும்; இந்நிலையில், 100 நாட்களான இந்த ஆட்சியில் பல்வேறு திட்டங்களுக்கு இந்த அரசு பெயரை மட்டும் தான் மாற்றியிருக்கிறது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை என்பதை மாற்றி சமூக நீதித் துறை என்று பெயர் மாற்றம் மட்டுமே நிகழ்ந்துள்ளது. அத்துறையில் எவ்வித மாற்றமும் நிகழ்ந்ததாகத் தெரியவில்லை. முதலமைச்சர் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் என்பது வெற்றி தொழில் முனைவோர் திட்டமாக. . .

### திட்டங்களின் பெயர்கள் மாற்றம்!

முதலமைச்சரின் சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டம் என்பது வெற்றி தொழில் முனைவோர் திட்டமாக மாறியுள்ளது. நன்னிலம் திட்டம் என்பது மண்ணின் மகள் திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. தொல்குடி திட்டம் ஆன்றோர் மேம்பாட்டுத் திட்டமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆக்கப்பூர்வமான செயல்கள் எதுவும் இதுவரை தொடங்கப்படவில்லை. எடுத்துக்காட்டாக, அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்டத்தின்கீழ் 2024-2025 ஆம் ஆண்டில் 124 மாணவர்களுக்கு 60.33 கோடி ரூபாய் வழங்கப்பட்டது. 2025-2026 ஆம் ஆண்டில் 65 கோடி ரூபாய் நிதியொதுக்கீடு செய்யப்பட்டது. புதிய குறிப்பில் உயர் கல்வி வாய்ப்புகள் தொடர்ந்தாலும் முந்தைய பயனாளிகளின் செலவினம் மற்றும் வளர்ச்சி வரிசை முழுமையாக முன்னிலைப்ப டுத்தப் பட வில்லை.

மேலும், அண்ணல் அம்பேத்கர் அயலக உயர் கல்வித் திட்டத்தின்கீழ் விண்ணப்பித்த சுமார் 316 நபர்களுக்கு Visa புறக்கணிப்பு செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வருகின்றன. அதுகுறித்து இதுவரை எந்த முழுமையான விளக்கமும் தரப்படவில்லை; அதற்கு மாற்று ஏற்பாடும் செய்யப்படவில்லை. விண்ணப்பிக்கும் மாணவர்கள் தங்களது விண்ணப்பங்கள் எந்த நிலையில் உள்ளன என்பதை எளிய முறையில்



அறிந்துகொள்ளவும், அவர்களுக்கு வழங்கக்கூடிய ஊக்கத்தொகை நிர்ணயம் என்ன என்பதையும் வெளிப்படைத்தன்மையோடு இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 100 நாட்களில் 10 ஆணவக் கொலைகள் நடந்துள்ளன; அதுகுறித்து இதுவரை என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? கடந்த ஆட்சிக் காலத்தில் தளபதியார் அவர்களால் அமைக்கப்பட்ட நீதியரசர் K.N. பாஷா தலைமையிலான ஆணையம் வழங்கிய பரிந்துரைகள்மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்பது குறித்து இங்கே கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டுள்ளேன்.

அதுபோல, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் தற்போது மீண்டும் கைகளில் வண்ணக் கயிறுமூலம் தங்களது ஜாதி அடையாளங்களை வெளிக்காட்டும் விதமாக, கட்டும் பழக்கம் மீண்டும் தலைதூக்கியுள்ளது. அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தீவிரமாகக் கண்காணிக்க அரசு உடனடியாக ஆணை பிறப்பிக்க வேண்டும்.

வன்கொடுமையைத் தடுக்கவும், சமூக நல்லிணக்கத்தை வளர்க்கவும் தொடங்கப்பட்ட சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவுகளின்கீழ் 13 Additional Commissioner மற்றும் DSP பணியிடங்கள் காலியாக உள்ளன. அதிலும் முக்கியமாக திருநெல்வேலி, தேனி, மதுரை போன்ற மாவட்டங்களில் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன. Sensitive ஆன இந்தப் பகுதிகளில் ஏன் பணியிடங்கள் நிர ப்பப்படாமல் உள்ளன என்பதைத் தங்கள் வாயிலாக கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். பிற்படுத்தப் பட்ட இஸ்லாமிய மாணவர்களின் கல்விக் கனவுகளை நனவாக்குவதற்கு 3.5 சதவிகிதம் இட ஒதுக்கீடு தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்.

நேற்று நடைபெற்ற மிலாடிநபி திருநாளுக்கு அரசு விடுமுறை தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்பின் வந்த ஆட்சியாளர்கள் அதை ரத்து செய்துவிட்டனர். மீண்டும் கழக ஆட்சி அமைந்தவுடன் அதை நான்காவது மிலாடி நபி தினத்தை அரசு விடுமுறை அறிவித்தது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

### குடியுரிமைத் திருத்தச் சட்டங்கள்!

CAA, NRC போன்ற குடியுரிமைத் திருத்தச் சட்டங்கள் வந்தபோது, இந்திய ஒன்றியத்தில் முதல் எதிர்ப்பினை பதிவு செய்த முதலமைச்சர் முன்னாள் முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதே குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து ஆளுநர் மாளிகையில் முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டவர் எங்களுடைய எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அண்ணன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழையடி வாழையாக, சிறுபான்மை மக்களின் நலனிலும், அவர்களுடைய பாதுகாப்பிலும், உரிமைகளிலும், உடன்பிறப்பாய் உடன் இருப்பது திராவிட முன்னேற்றக் கழகம் மட்டும்தான். இரண்டு தினங்களுக்கு முன்னதாக, இஸ்லாமியர்களை தி.மு.க. அவதூறாகப் பேசியதாகக் கூறி, அந்த சட்டமன்ற உறுப்பினர் சகோதரர், -குடியுரிமை எதிர்ப்பு போராட்டங்கள் நடந்த காலத்தில், ஒரு நபரைக் குறிப்பிட்டு, அவர் அந்த இஸ்லாமிய சமூகத்தில் என்னென்ன தீங்கு செய்திருக்கிறார் என்று பல்வேறு YouTube channel மூலமாக பேட்டி யளித்துள்ளார்கள். குறிப்பாக, Beast படத்தைத் தடை செய்ய வேண்டுமென்று அவர் தனி, பிரத்யேக பேட்டியே அளித்திருந்தார். அதிலே இஸ்லாமி யர்களுக்கு எதிராக இப்போது முதலமைச்சராக இருக்கக்கூடியவர் எவ்வாறு செயல்படுகிறார் என்பதைக்கூட 40 நிமிடங்கள் அவர் பேட்டியளிப்பது என்பது பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதற்கு அவர் பதிலளிப்பாரா என்பதுதான் எங்களுடைய கேள்வி.

### தமிழ்நாட்டின் வளர்ச்சி!

பொதுப் பணி மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பட்டியலிட்டார். ஆனால், அவர் ஒன்றிய அரசாங்கத்தோடு பட்டியலிட வேண்டும். இந்தத் தமிழ்நாட்டை திராவிட அரசு ஆளும்போது, எந்தளவிற்கு வளர்ச்சி அடைந்தி ருக்கிறது, எவ்வளவுபேர் பயன் பெற்றிருக்கிறார்கள் என்று. கடந்த ஆட்சிக்காலங்களில் காவல் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, அதேபோன்று, அரசு அதிகாரிகளாக இருக்கக்கூடியவர்கள் 50 சதவிகிதம் நபர்கள் ஆதி திராவிட மக்கள்தான் இன்றைக்கு அரசுப் பணியில் இருக்கிறார்கள். உயர் கல்வியை எடுத்தாலும் ஆதி திராவிடர் நலத் துறை கல்வித் துறையிலும் சிறந்து விளங்கியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று இந்தியாவை ஒப்பிடும்போது தமிழ்நாடு தான் ஆதி திராவிட நலத் துறையில் முதலிடத்தில் வகித்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவுபடுத்தவிரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரேயொரு இலக்குதான். இந்த அரசை அவர்கள் ஆளுகிறார்கள் என்று நினைக்கவில்லை. நாங்கள்தான் ஆண்டுகொண்டிருக்கிறோம் என்று எங்களை குறை சொல்லவேண்டுமென்ற அடிப்படை யில்தான் அவருடைய செயல்பாடுகள் இருக்கிறதே யொழிய, . . . இந்த அவையில் பேசிய பள்ளிக் கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் அவர்கள், கடந்த திராவிட மாடல் ஆட்சி இரண்டாண்டு காலம் முடிவுற்றபோது, அவரே எங்களுடைய முன்னாள் முதல்வர் அவர்களைப் பாராட்டி, சீராட்டி இப்படியொரு ஆட்சி உலகத்திலே நடக்காது என்று சொன்னார்.

இன்று நம்முடைய சமூக நீதித் துறை அமைச்சர் அவர்கள் இங்கு எதுவுமே செய்யவில்லை என்று பதிவிட்டார். கடந்த ஆட்சியில், அன்று உறுப்பினராக இருந்த, வி.சி.க. கட்சி உறுப்பினர் அண்ணன் சிந்தனைச் செல்வன் அவர்கள், எங்கள் அரசைப் புகழ்ந்து, புகழ்ந்து பேசுவார். அப்போதெல்லாம் நாங்கள் நினைத்துக் கொண்டோம், நாம் இன்றைக்கு சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் இருக்கிறோம். அண்ணன் அவர்களே அதை தெளிவுபடுத்துவிட்டார் என்று மிகவும் நம்பிக்கை யோடு இருந்து, எங்கள் திட்டங்கள் மேலும், மேலும் சிறப்பாக செயல்பட்டு கொண்டிருந்தோம். ஆனால், இன்றைக்கு அமைச்சர் அவர்கள், அவருக்கு எதிராக, அவர் கட்சிக்கு எதிராகவே செயல்பட்டு கொண்டிருக்கிறார். நாங்களும் 107 இடங்களில் வெற்றிபெற்றிருந்து, எங்களுக்கும் வி.சி.க.வும், காங்கிரசும் ஆதரவு கொடுத்திருந்தால், நாங்களும் அமைச்சரவையில் கொடுக்கத்தான் செய்திருப்போம். இது எல்லா பக்கமும் நியாயமான விஷயம்தான். (குறுக்கீடு)

முடிவிற்கு கொண்டுவந்த அண்ணியார் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய இஸ்லாமிய சொந்தங்களை south sideல் எப்படி சொல்வோம் என்றால் தாத்தா, பேரன் என்ற முறை உண்டு. மாமா என்று ஒரு பகுதியில் உண்டு. திருநெல்வேலி பக்கத்தில் தாத்தா, பேரன் என்ற முறை உண்டு. தொப்புள்கொடி உறவாக, அவ்வளவு உரிமையோடு இருக்கக்கூடியவர்கள்.

### இஸ்லாமிய சொந்தங்கள்

இஸ்லாமிய சொந்தங்கள் மற்றும் அனைத்துச் சமுதாய மக்கள் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டு, ஆயுள்தண்டனை கைதிகளாக ஏறக்குறைய 25 ஆண்டு காலம் சிறைச் சாலையில் இருந்துள்ளனர். மேற்கண்ட சிறைவாசிகளை இதற்கு முன்னாள் இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், 10 ஆண்டுகளுக்குமேல் உள்ள சிறைவாசி களை நன்னடத்தைச் சான்றிதழ் பெற்று, சிறையில் எவ்விதமான குற்றச்சாட்டுகளும் செய்யாத சிறைவாசி களை விடுதலை செய்தார்கள். அதுபோன்றுதான், தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் தளபதியார் அவர்கள் ஆட்சிக் காலத்திலும் ஆளுநர் அவர்களால் கழக அரசினுடைய செயல் திட்டம் நிறுத்தி வைக்கப்பட்டது.

இந்த அரசை நான் கேட்டுக்கொள்வது, தமிழகத்தில் இருக்கக்கூடிய சிறைவாசிகளை நன்னடத்தையின் அடிப்படையில், சிறையில் தன்னுடைய குற்றங்களை உணர்ந்துள்ளோர்களைக் கண்டறிந்து, அவர்களை வெகு விரைவில் இந்த அரசு விடுதலை செய்ய வேண்டுகிறேன். கிறித்துவ திருசபைகளில் இறந்தவர்களை புதைக்கும் மயான இடங்களை அரசு சார்பில் கண்டறிந்து வழங்கிட தொடர்ந்து கோரிக்கை வைக்கப்பட்டு வருகிறது. எனவே, இதுகுறித்து முழுமையான ஆய்வு மேற்கொண்டு அவர்களுக்கான இடங்களை ஒதுக்கீடு செய்து தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

### தொகுதிக் கோரிக்கைகள்

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தாமிரபரணி கூட்டுக் குடிநீர் தந்து 30 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது. அந்த நேரத்தில் இருந்த மக்கள் தொகையைக் கணக்கெடுத்துதான் தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் கொடுத்தார்கள். ஆனால், தற்போது மக்கள் தொகைப் பெருக்கத்தால் கிராமப்புறங்களில் மிகப் பெரிய சிரமத்திற்குரிய குடிநீர் தட்டுப்பாடு நிலவுகிறது. ஆனால், எங்களுடைய ஆட்சியில் சங்கரன் கோவில் நகரப் பகுதிக்கு புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டம் வழங்கினோம். அதேபோல, இராஜபாளையம், சிவகாசிக்கெல்லாம் வழங்கி யிருந்தோம். இப்போது என்னவென்றால் already profile போடப்பட்டு, குருவிக்குளம் Union, மானூர் Union, மேலநீலிதநல்லூர், வாசுதேவநல்லூர், சங்கரன்கோவிலுக்கு உட்பட 500 கோடி ரூபாய்க்கு மதிப்பீடு போடப்பட்டிருக்கிறது. அந்தப் புதிய கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கே செங்கல் சூளை, மிக, மிக பெரிய பிரச்சினையாக இருக்கிறது. 100க்கும் மேற்பட்ட கைதிகள் மூலமாக அறுக்கக்கூடிய செங்கல் சூளைகள் மூடப்பட்டுள்ளன. ஆனால், மற்ற மாவட்டங்களில் அரசு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். அதேபோல, நீங்கள் அனுமதி கொடுத்து, விதிமுறைகளுக்குட்பட்டு, அதை செயல்படுத்த வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். புளியங்குடியைச் சுற்றி அதிகமான சிறு தொழில்கள், நெசவுத் தொழில் இயந்திரங்கள் இருப்பதால் அதை மையமாகக் கொண்டு மின் வாரிய கோட்ட அலுவலகம் அமைக்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, புளியங்குடி மருத்துவமனைக்கு வெளிநோயாளியாக ஒரு நாளைக்கு 700க்கும் மேற்பட்டவர்கள் வருகிறார்கள். அங்கு போதுமான அளவிற்கு உட்கட்டமைப்பு வசதியில்லை. கூடுதலாக மருத்துவக் கட்டடங்கள் அமைக்குமாறும், மருத்துவர்கள், செவிலியர்களை பணியமர்த்த வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். புளியங்குடி நகராட்சியை முதல் நிலை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்பதையும் எங்களுடைய கோரிக்கையாக இந்த அவையில் வைக்கக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல, வீரசிகாமணி பகுதியில் கால்நடைகள் அதிகமாக இருப்பதால் அங்கு கால்நடை மருத்துவ மனை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தென்மலையில், இப்போது அறுவடை சமயத்தில்கூட பொட்டலில்தான் நெல் மூட்டைகளை அடுக்கி வைத்திருந்தார்கள். அங்கு ஒரு நெல் சேமிப்பு கிடங்கு அமைத்துத் தந்தால், மிகவும் ஏதுவாக இருக்கும். அதையும் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாமன்னன் பூலித்தேவர் அவர்களுடைய 311வது ஜெயந்தி விழா இன்னும் நான்கு நாட்களில் வருகின்ற 1 ஆம் தேதி நடைபெற இருக்கிறது. இன்னும் அந்த சிலைக்கு வர்ணம் பூசவில்லை. மணிமண்டபத்திற்கும் paint அடிக்காமல் இருக்கிறது. அதனால், Union controlல் இருக்கக்கூடிய மாமன்னன் பூலித்தேவர் அவர்களுடைய மணிமண்டபத்தை செய்தித் துறையோ அல்லது சுற்றுலாத் துறையோ பராமரிப்பதற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்பதை யும் கேட்டுக்கொள்கிறேன். மாமன்னன் பூலித்தேவர் அவர்களுடைய முதன்மை படைத் தளபதி வெண்ணி காலடியான் அவர்கள். அங்கு ஜெயந்தி விழா நடைபெறுகிறது. ஆனால், நீதிமன்ற உத்தர வுப்படி, மற்ற நபர்கள் யாரும் அந்த ஊருக்குச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அங்கு எல்லோரும் சென்று மரியாதை செலுத்துவதற்கு அரசு சார்பில் அரசு விழாவாக அறிவிக்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் subjectல் இருக்கிறேன். இப்போதும் time தரவில்லை யென்றால் நன்றாக இருக்காது.

இப்போது முடிக்கப் போகிறேன். பாம்புக்கோவில் சந்தையென்பது வாசுதேவ நல்லூரில் இருக்கிறது. ஒன்றிய அரசாங்கத்தில் பாம்புக்கோவில் சந்தையென்று இருக்கிறது. ஆனால், மாநில அரசாங்கத்தில் அது மடத்துப்பட்டி என்கிற பெயரில் இருக்கிறது. இதனால் நிர்வாகக் கோளாறு ஏற்படுகிறது. இதனை சரி செய்து பாம்புக்கோவில் சந்தை என்று பெயர் வைக்க வேண்டுமென்பதையும் கேட்டுக்கொள்கிறேன். வாசுதேவநல்லூர் தொகுதிக்கு உட்பட்ட கரிவலம்வந்தநல்லூரில் ஆரம்ப சுகாதார நிலையத்தில் முன்பு 108 வாகனம் இருந்தது.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர் விடுதி வளாகத்தினுள் அமைக்கப்பட்டுள்ள மருத்துவமனையில் தண்ணீர் இல்லை. அதை உடனடியாக அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏனென்றால், sugar patient போகும்போது மயங்கி விழுந்தால்கூட தெளிப்பதற்கு தண்ணீர் இல்லை. அதை நீங்கள் கனிவோடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 24 ஆம் தேதி, அவையில் நாங்கள் இருந்தோம். நீங்கள் மற்றொரு உறுப்பினரை, ஒருமையில் பேசாதீர்கள் என்று கண்டிப்புடன் சொன்னீர்கள். TVல் முதல்வர் அவர்களின் முகத்தைத்தான் காட்ட வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், Polimer TVல் எங்களை round போட்டு காட்டியிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் நீங்கள் எங்களைச் சொல்லவில்லை. ஆனால், என்னை காண்பித்து, Polimer TVல் newsஐ பரப்பி விடுகிறார்கள். இதனால் என்ன ஆகிறது என்றால், எங்கள் தொகுதியில் உள்ளவர்கள் என்னிடம் ஏன் இப்படி என்று கேட்கிறார்கள். நாங்கள் இங்கு தொகுதி மக்களின் பிரச்சினையைப் பேசத்தான் வந்திருக்கிறோம். இந்த மாதிரி ஒரு video போட்டு, கை தூக்குவதையெல்லாம் comment அடித்து, Polimer TV செய்துகொண்டிருக்கிறார்கள். அதை அவைத் தலைவராக தடுத்து நிறுத்த வேண்டும். அதற்கான அறிவுரைகளை வழங்க வேண்டும்.

### முதல் அறிவிப்பு படிக்கப்படுகிறது

அதேபோல, அந்த அறிவிப்பு முதலில் வாசிக்கப்படுகிறது என்று இன்றைக்கு ஓர் அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். நான் என்ன சொல்கிறேன் என்றால், கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தோடு சேர்த்துக் கொடுத்துவிட்டீர்களென்றால், நாங்கள் அதையும் சேர்த்து prepare செய்துவிட்டு வந்துவிடுவோம்.

அது கொஞ்சம் சிறப்பாக இருக்கும். இறுதியாக எங்களுடைய திராவிட இயக்க தீரர்களுக்கு என்றென்றும் அறிவைத் தீட்டுகிற இடம்தான் எங்கள் அண்ணா அறிவாலயம். சட்டமன்ற உறுப்பினர் தொடங்கி சாமானியத் தொண்டன் வரை கழகத்தில் ஒவ்வொரு உடன்பிறப்பும் எளிதில் அணுகக்கூடிய அனைவருக்கும் சொந்தமான இடம் எங்கள் அண்ணா அறிவாலயம். அது வாடகைக்குவிட வேண்டிய கட்டடம் அல்ல. அதை புரிந்துகொள்ள வேண்டும். திராவிட இயக்கத்தின் வரலாற்றையும், இலட்சி யத்தையும், உடன்பிறப்புகளின் உணர்வுகளையும் தாங்கி நிற்கும் பாசமிகு இல்லம். தமிழ்நாடு மாணவர்களுக்காக சுமார் நூற்றாண்டு கால போராட்டம், கல்வியை விரும்பிய இடங்களில் மாண வர்கள் படிக்க வேண்டுமென்பது (மணி யடிக்கப்பெற்றது) அதனை எப்போதும் ஊக்குவித்து வரும் திராவிட அரசியலிலிருந்து அவரது பழைய பிற்போக்கு அரசியலான குலத் தொழில் கல்வியை ஊக்குவிக்கும் அமைச்சர் அவர்கள் தற்போது தஞ்சம் அடைந்திருக்கும் இயக்கத்தின் தலைமை அலுவலகமென கூறப்படும். வார இறுதி நாட்கள் மட்டும் elite people. ..

மட்டும் திறக்கப்படும் இடங்களை வாடகைக்கு விட்டு வருவாய் தேடிக்கொள்ளலாம். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அண்ணா அறிவாலயம் என்றென்றும் கழக தொண்டர்களுக்கான இல்லமாக வும், திராவிட இயக்கத்தின் அடையாளமாகவும் திகழும். அத்தகைய. . .

வளர்த்து, எங்களைப்போன்ற சாமானியத் தொண்டர்களுக்கும் அரசியல் களத்தில் குரல் கொடுக்க வாய்ப்பளித்த திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, அவையில் அமர்கிறேன்.

### தொகுதிக் கோரிக்கைகள்!

வாசுதேவநல்லூர் தொகுதி, “சமர் அணை” அமைத்துத் தர வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடியை தலைமையாகக் கொண்டு புதிய தாலுகா அறிவித்திட வேண்டும். தென்காசி மாவட்ட பகுதியில் வாழும் இருளர் சமுதாய மக்கள் மற்றும் காட்டுநாயக்கர் சமுதாயம், வீரக்கொடி வெள்ளாளர் சமுதாயம், 24 மனை தெலுங்கு செட்டியார் சமுதாயம், போன்றவர்களுக்கு சாதி சான்றிதழ்கள் வழங்கிட வேண்டும். தென்காசி மாவட்டம், சங்கரன்கோவில் நகரப் பகுதியில், விடுபட்டோருக்கு பட்டா வழங்கும் பணியை விரைந்து தொடங்கிட வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, பேரூர் பகுதியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக தரம் உயர்த்த வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி வட்டார பகுதியில் ஒரு அரசு கலைக்கல்லூரி அமைக்க வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, சிவகிரி அல்லது புளியங்குடி ஆகிய ஏதாவதொரு பகுதியில் உழவர் சந்தை அமைக்க வேண்டும்.

வாசுதேவநல்லூர் தொகுதி, சங்கரன்கோவில் வட்டம், பெரும்பத்தூர் கிராமம், கண்டிகைப்பேரி மற்றும் புன்னைவனப்பேரி கிராமத்தில் அனுமதி மறுக்கப்பட்டுள்ள 30 நாட்டுச்செங்கல் சூளைகளுக்கு அனுமதி வழங்கிட வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, விவசாய மக்களிடம் இருந்து பெறப்பட்ட கரும்பிற்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை அரசு உடனடியாக சர்க்கரை ஆலை நிர்வாகத்துடன் பேச்சு வார்த்தை நடத்தி உடனடியாக பெற்றுத் தர வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி அரசு மருத்துவமனையில் கூடுதல் மருத்துவ கட்டடங்கள் அமைக்க வேண்டும். கரிவலம்வந்த நல்லூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் படுக்கை வசதி கொண்ட மருத்தவ கட்டடம் கட்டித்தர வேண்டும். சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றியத்தில், கரிவலம் வந்தநல்லூரை மையமாகக் கொண்டு மொழிஞாயிறு தேவநேயபாவாணர் பெயரில் ஒரு கல்லூரி அமைக்க வேண்டும்.

வாசுதேவநல்லூர் தொகுதிக்குட்பட்ட வீரசிகாமணி பகுதியில் புதிதாக கால்நடை மருத்துவமனை அமைத்துத்தர வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி கால்நடை மருத்துவமனை கட்டடத்தை இடித்து. புதிய கட்டடம் அமைத்து ஆய்வக்கூடம் கட்டித்தர வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதியில் உள்ள மடத்துப்பட்டி கிராமம் மற்றும் பாம்பு கோவில் சந்தை கிராமம் என பெயர் மாறி மாறி உள்ள கிராமப்பெயரை, பாம்புகோவில் சந்தை என்ற ஒரே பெயரோடு தமிழ்நாடு அரசு கோப்புகளில் பெயர் மாற்றம் செய்ய வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, 108 ஆம்புலன்ஸ் வாகனம் கரிவலம் ஆரம்ப சுகாதார நிலையத்திலேயே நிறுத்தி வைக்கப் பட வேண்டும்.

வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சியில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் உள்விளையாட்டு அரங்கம் அமைத்திட வேண்டும். வாசுதேவ நல்லூர் தொகுதி, தென்மலையை மையமாக கொண்டு நெல் சேமிப்பு கிடங்கு அமைத்துத்தர வேண்டும். வாசுதே வநல்லூர் தொகுதியில் நிறுவப்பட்டுள்ள பூலித்தேவர் திருவுருவச்சிலைக்கு நிழற்குடை அமைத்திட வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, புளியங்குடி நகராட்சிக்கு புதிதாக தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதிக்குட்பட்ட சிவகிரியில் சார்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும். வாசுதேவநல்லூர் தொகுதி, கடையநல்லூர் தாலுகாவைப் பிரித்து புளியங்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய தாலுகா அமைத்துத்தர வேண்டும்.

இவ்வாறு வாசுதேவ நல்லூர் ஈ.ராஜா பேசினார்.